# 15 திருமணம்



15.1 படம் மெய்விவாகச் சடங்கு

> கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்.
>
> மாற்கு 10:9

திருமணம் என்பது கணவனும் மனைவியும் மனம் ஒருமித்து ஒருவருக்கு ஒருவர் தம்மை அர்ப்பணிக்கும் முறிவுபடாத பிரிக்க முடியாத உடன்படிக்கையாகும். ஒரு பெண்ணும், ஒரு ஆணும் சுதந்திரமாக சுயவிருப்பத்துடன் மேற்கொள்ளும் இவ்வுடன்படிக்கை வாழ்நாள் முழுவதற்குமான ஓர் உடன்படிக்கையாகும். அதனால் ஒரு சாரார் அல்லது இருவருமே ஒரு சந்தர்ப்பத்தில் அவ்விருப்பத்தை கைவிட்டாலும் திருமண உடன்படிக்கை நிலைத்திருக்கும்.

### கத்தோலிக்க திருமணத்தின் பண்புகள்

**ஒருமை**

ஒரு ஆண் ஒரு பெண்ணை ஒரு பெண் ஒரு ஆணை மட்டுமே திருமணம் செய்து கொள்ளலாம் என்பதாகும்.

**கட்டவிழாமை**

கட்டவிழாமை என்றால் விவாகரத்துச் செய்ய முடியாது என்பதாகும்.

கத்தோலிக்க திருமணத்தின் நோக்கம்

| அன்னியோன்னிய அன்பால் முழுமையடைதல் | குழந்தைப்பேறும் அவர்களை வளர்த்தலும் |
|---|---|
| வாழ்நாள் முழுவதும் நடாத்திச் செல்லும் தொடர்பைக், கிறிஸ்து தமது திருச்சபையோடு கொண்டுள்ள தொடர்புக்கு ஒப்பிடலாம். அத்தொடர்பைக் கட்டியெழுப்புவது, இருவரும் ஒருவர் ஒருவர்மீது காட்டும் அன்பினாலாகும். அவ் அன்பை நாளுக்கு நாள் வளர்த்துக் கொள்ள வேண்டும். | தமக்குப் பிறக்கும் பிள்ளைகளை மகிழ்வுடன் ஏற்று, அவர்களுக்கு அன்பு, பாதுகாப்பு, ஊட்டம், கிறிஸ்தவ நடத்தை, கல்வி என்பவற்றைப் பெற்றுக்கொடுத்தல் ஆகும். |

பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம்; மக்கட்பேறு, அவர் அளிக்கும் பரிசில்

திருப்பாடல் 127:3

## கத்தோலிக்க திருமணத்திற்குள்ள சட்டரீதியான தடைகள்

- வயது : 18 வயதிற்குக் குறையாதிருத்தல்
  23-29க்கும் இடைப்பட்டவயதில் திருமணம் செய்வது சுகதேகியான குழந்தைகளைப் பெற்றெடுக்க உதவும்.

- சுதந்திர விருப்பம்: தான் விரும்பாத ஒருவரைத் திருமணம் செய்யும்படி எவராலும் கட்டாயப்படுத்த முடியாது.

- குற்றம் : ஒருவர் பிறர் தாரத்தை தனதாக்கிக்கொள்ள விரும்பி, தாம் விரும்புபவரின் துணையைக் கொலை செய்வதும், பிறர் தாரத்தைவிரும்பித் தனது தாரத்தை கொலை செய்வதும் குற்றமாகும். இவ்வாறு குற்றம் புரிந்தவருடன் சட்ட ரீதியான திருமண உறவை மேற்கொள்ள முடியாது.

- இரத்த உறவு
- கலப்புத் திருமணம்

## திருமண ஒப்பந்தம்

திருமணத்தின் வெளி அடையாளமாக விளங்குவது திருமண ஒப்பந்தமாகும்.

பெயர் என்னும் நான் உன்னை என் மனைவியாக கணவனாக ஏற்றுக் கொள்ளுகிறேன். இன்பத்திலும் துன்பத்திலும் உடல் நலத்திலும் நோயிலும் நான் உனக்குப் பிரமாணிக்கமாயிருந்து, என் வாழ்நாளெல்லாம் உன்னை நேசிக்கவும், மதிக்கவும் வாக்களிக்கிறேன்.

திருமணம் என்னும் அருளடையாளத்தை நிறைவேற்றுவோர் திருமணம் செய்துகொள்ளப் போகும் இருவருமாவர். குருவானவர் திருச்சபையின் சட்ட பூர்வமான சாட்சியாவார். அவர் கிறிஸ்துவின் கண்காணும் பிரதிநிதியாக இறைவனின் ஆசீரை அளிக்கிறார்.

திருமுழுக்குப் பெற்ற இருவர் மத்தியில் இடம் பெறும் திருமண ஒப்பந்தம் ஓர் அருளடையாளமாகும். அத்தகைய ஒப்பந்தத்தை முறிவு செய்ய முடியாது.

''இதனால் கணவர் தம்தாய் தந்தையை விட்டு விட்டு தம் மனைவியுடன் ஒன்றித்திருப்பார். இருவரும் ஒரே உடலாயிருப்பர்'' என மறைநூல் கூறுகிறது. இதில் அடங்கியுள்ள மறைபொருள் பெரிது. இது திருச்சபைக்கும் கிறிஸ்த்துவுக்கும் பொருந்துவதாகக் கொள்கிறேன். எப்படியும், உங்களுள் ஒவ்வொருவரும் தம்மீது அன்புகொள்வதுபோல தம் மனைவியின் மீதும் அன்பு செலுத்த வேண்டும். மனைவியும் தன் கணவருக்கு அஞ்சி வாழ வேண்டும்.

(எபேசி 5:31-33)

## திருமணமும் சிவில் சட்டமும்

இலங்கை ஜனநாயக அரசின் சட்ட ஒழுங்குகளின்படி எல்லாத் திருமணங்களும் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். இதன்படி ஆலயங்களில் நடைபெறும் கத்தோலிக்க திருமணங்களும் அரச பதிவேடுகளில் பதிவு செய்யப்படுகிறன. அதைச் செய்பவர் பங்குக் குருவானவராவார். அவர் பதிவாளராக செயற்பட அவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு பதிவு செய்வது அருளடையாளத்துடன் தொடர்புடையதல்ல. அது முக்கியத்துவம் பெறுவது சிவில் உரிமைகளுக்காக மட்டுமே. அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பினும், இல்லையெனினும், ஆலயத்தில் நடைபெறும் திருமண அருளடையாளம் என்ற வகையில் வாழ்நாள் முழுவதற்கும் செல்லுபடியானதாகும். ஆயினும் அரசாங்கத்தின் சட்ட ஒழுங்குகளுக்கு மாறாக அமையாது, தமது நில புலன் உரிமைகள் பாதுகாக்கப்படவும் அரச ாங்கத்தில் திருமணம் பதிவு செய்யப்பட வேண்டும். கத்தோலிக்கர் அல்லாத ஒரு குரு முன்னிலையில் அல்லது பதிவாளர் முன்னிலையில் திருமணம் செய்யக் கத்தோலிக்கருக்கு அனுமதியில்லை அத்தகைய திருமணங்கள் அருளடையாளமாக முடியாது.

## விவாகரத்தும் செல்லுபடியாகா திருமணமும்

கத்தோலிக்க திருச்சபை விவாகரத்தை ஒருபோதும் அனுமதிப்பதில்லை. ஏனெனில் திருமணத்தை செல்லுபடியற்றதாக்க திருச்சபையாலும் முடியாது. அது இறைவன் முன்னிலையில் செய்த ஓர் உடன்படிக்கையாகும். ஆயினும் சில சந்தர்ப்பங்களில் திருச்சபை நீதிமன்றம் ஒன்றில் செய்யப்படும் பரிசீலனையின் முடிவில் குறிப்பிட்ட சில திருமணங்கள் செல்லுபடியாக திருமணங்கள் என வெளிப்படுத்த முடியும். அவ்வாறு வெளிப்படுத்துவது சுய விருப்பமின்றி நிறைவேற்றப்பட்ட திருமணங்கள் தொடர்பாகவும், திருமணத்திற்குச் சட்டபூர்வமான தடை இருந்தும் அதைப்பற்றி முறையான அனுமதியின்றி நிறைவேற்றப்பட்ட திருமணங்கள் தொடர்பாகவும் ஆகும்.

## கத்தோலிக்க திருமணத்தை வெற்றிகரமானதாக்கிக்கொள்ள,

- இருவரும் கத்தோலிக்கராயிருத்தல்
- மனம் ஒரு மித்த அன்பும் பிரமாணிக்கமும்
- தூய்மையான வாழ்க்கை
- புரிந்துணரும் தன்மையும், தியாகமும்
- குடும்பத்தின் ஒற்றுமைக்காக செயற்படுதல்

''இனி அவர்கள் இருவர் அல்ல; ஒரே உடல். எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்''

மத்தேயு (19:6)

**செயற்பாடு**

1. அரச திருமண பதிவாளர் ஒருவர் முன்னிலையில் திருமணமாகப்போகும் கத்தோலிக்கர் ஒருவருக்கு நீர் என்ன கூறுவீர் என விளக்குக.

2. கத்தோலிக்க திருமண வாழ்வை வெற்றிகரமுள்ளதாக்கிக் கொள்ள தேவையானவை பற்றி ஓர் பட்டியல் தயாரிக்குக.

**வாழ்க்கைக்கு**

பாடசாலை செல்லும் பருவத்தில் காதல் செய்வதைக் தவிர்க்கவும்.